108 1-66-P A

அநேக சங்கீத வித்வான்கள் பாடிய

கிராமபோன் கீர்த்தனாம்ருதம்

7 NOV 1931

ஸ்ரீவாணி விலாச புத்தகசாலையார் பதிப்பித்ததாவென பார்த்து வாங்கவும்.

விலாச புத்தகசாலை,
பாதிரிப்புலியூர்.
1931
[விலை அணா 12.

NR21 128228

நாவல் உலகில் நவீனத்தில் நவீனமாகத் தோன்றி
இருக்கும் நவரச அலங்கார நாவல்!

ருக்மிணீகாந்தன்

அல்லது

ஆபத்தில்காக்கும் அன்பர்கள்

(அழகிய 5 ஆப்டோன் படங்களுடன்)

ஸ்ரீமதி. வை மு கோதைநாயகி அம்மாள் எழுதியது.

அ லங்கார நடை! அ திசயக் கதை! அ பூர்வ சம்பவம்!	ஆ னந்தம்! ஆ ச்சர்யம்! ஆ ண்மை!	இ னியமொழி! இ ன்பரசம்! இ ணையிலாக்கற்பனை!

இவை ஒருங்கு அமைந்து படிப்பவர் மனதைப் பிரமிக்கச் செய்யும் உன்னத திப்பறியும் நாவல்.

புத்தகப் படிப்பால் நீங்கள்
எதையறிய
ஆசைப்படுகிறீர்கள் ?
கற்பனு சக்தியால்
வர்ணிக்கப்படக்கூடியவை
எவை ?
சிங்காரம்!, ஆச்சர்யம்!, வீரம்!,
வைராக்கியம்!,
ஹாஸ்யம்!, காதல்!,
ரௌத்திரம்!, சோகம்!,
சமத்காரம்!

நவரச அலங்காரங்களெல்லாம் அமைந்த புத்தகம் இதுவே
15 அழகிய அத்தியாயங்களைக் கொண்டது. விலை ரூ. 2-0-0

ஸ்ரீ வாணி விலாச புத்தகசாலை, திருப்பாதிரிப்புலியூர்.

உ

கணபதி துணை.

கிராமபோன் கீர்த்தனாம்ருதம்

(1-வது பாகம்.)

S. V. சுப்பைய பாகவதர்

பிளேட் நெ. 2836 கற்பிற்சிறந்த எந்தன் கனியே

(பாகம் 1 and 2)

இராகம் காபி

பல்லவி

1. கற்பிற் சிறந்த எந்தன் கனியே அருங்கனியே
பெருந்துணையே அருந்துணையே

பல்லவி.

அற்புதமகிமையை அறிந்த உன்குணமே
ஐயோ உனைவருத்தல் வருந்துணை வினையே
கற்பயம் தருமாயர் குலர்த்தலைக் குணமே
நம்பிவிடுத்தே உத்தன் தேவி
காணேபாவி உயிர் மேவி க

சரணம்.

2. செல்வச் சிறப்பிழந்து சிறமப்பட்டோமே
தேவடியாள் கடனால் சிறமமுற்றோமே
வல்வினைப்பயன் வந்து வழிதடுத்தானே
வந்தநமக்கு இந்தக் காலம்
அலங்கோலம் தவ சீலம்
அலங்கோலம் க

கிராமஃபோன்

பிளேட் நெ. 2717 { நல்வாக்கு காபி
சுருளிமலை செஞ்சுருட்டி.

பல்லவி

நல்வாக்கு நீ [illegible]ாடடி நான் சிலம்பு விற்றுவாரேன்
பத்தினிப் பெண்ணே நல்

அநுபல்லவி.

செல்வாக்குடனிருந்தோம் தேவடியாள் கடனால் நொந்தோம்
பத்தினிப் பெண்ணே

சரணம்.

தேங்காயுடைந்து விடும்
திருவிளக்கு நின்று விடும்
மாங்கா யழுகிவிடும்
மல்லிகைப் பூ வாடிவிடும்
அம்மம்மா, செம்பு ஜலங்குறையும்
சேர்த்த சந்தனமுலரும்
பண்பாய்ப் பெட்டியுடையும்
அதுமாறாமல் தானிருந்தால்
வைத்த அடையாளங்கள்
அது மாறாமல் தானிருந்தால் நான்
செத்துமடியாமலே திரும்பி
வருவேனடி பத்தினிப்பெண்ணே நல்

---

4. சுருளிமலை மீதில் மேவும் சிலா
உன்னை ஸ்தோத்தரித்தேன்
சுப்ரமண்ய வேலா நல்ல
தோகைமயில் மீதிலேறி
வாருடனே காத்தருள்வாய்
துய்யா முருகையா
கண்ணியமுடனே பலநாளும் மச்சக்
காவடி உன் சந்நிதியில் கூடும் அந்தக்
காக்ஷிதனை என்சொல்வேன் மாக்ஷிமை மிகுந்திலங்கும்
கந்தா சிவமைந்தா சுரு

பிளேட் நெ 2742 { பூங்கா விநோதம் ஹரிகாம்போதி
தாரணியில்—தேசிகத்தோடி

பல்லவி.

5. பூங்கா விநோதமே
புகலவொண்ணாதவர் மாதவி பூ

அநுபல்லவி.

புத்திக்கும் எத்திக்கும்
வினையவொரு பூ
பொங்கும் தங்கும் பரிமள
துங்கம் தங்கும் மகிழ் பெற பூ
பொன்னுலகம் தன்னுருவாய்
அவர்தரு மின்னிலமாய்
மன்னர்களும் மகிழ்பெற பூ
பூரிகமே சித்தவே மிக்கவே
விவகாரிக்கமே ரித்தவே மிக்கவே பூ
புனிதப்படுபவர் இனிதிற் றிடமுறு
எனிதர்கதிரய அணிதர்கதிரய பூ
பாங்கான சோலை சூழ்ச்சி
பற்பல மற்புத இப்புவிக் காட்சி பூ

பல்லவி.

6. தாரணியில் அன்புகொண்ட
தங்கையைக் காணேன் நான் தா

அநுபல்லவி.

தங்கையைக் காணேன் நான்
இங்கு நிற்குறேன் தா

சரணம்.

நேரில் எனைத் தேடினாள்
நெஞ்சமிக வாடினாள்
ஆருமற்ற பாவியானேன்
அபலையோடு நான் அப்பா தா

பிளேட் நெ. 2768 அப்பனே நீயே கதியே

பாகம் 1 & 2

இராகம் செஞ்சுருட்டி

பல்லவி.

அப்பனே நீயேகதியே நீதான் கதியே அ

அநுபல்லவி.

7· தூயநின் தெரிசனத் தொடர்ந்தெனையழைக்க
தாண்டியநெற்பயிர் துரிதத்திற் தழைக்க
மாலையர் நாக்கரும் மலர்மதம் யான்தொழ
மகிழ்வேயூன்றிட என் மனத்தே
சொற்பனத்தே வரும் நீயே கதியே அ

8. நாளைக்கு நாளைக் கென்றே தினம் கழியுது
ஞான சபையை எண்ணில் ஆனந்தம் பொழியுது
வேளைக்குதவி செய்ய வெறுச் சிலம்பழியுது
விரட்டா துயர் கரட்டா
நதிக்கரட்டும் பாபாட்டும் பாதமே அ

பிளேட் நே. 2607 { கொஞ்சம் சங்கடமா—உசேனி
கண்மணியான ருக்மணி—
ஆனந்த பைரவி

பல்லவி.

9. கொஞ்சம் சங்கடமா வந்து
கோலாகலாமானல்—லீலை செய்யாமலே கொ

அநுபல்லவி.

நெஞ்சறியச் சொன்னேன் பஞ்சணை மீது
நித்திரை யேது நினைவு மாருது

செஞ்சல் கிளி உன்னைக் கொஞ்சிடத் தூது
தேடுதே உந்தனை நாடினபோது
தினையளவும் கருணையுடன் பாராயோ மானே
தணியரசும் பெறவுனிடம் தாரானோ நானே
சித்தத்தே மிகு மற்புத முத்துச்சாமிக் கவிப்படி
வைத்திட்டானை யுரைப்பது பொய்த்தும் போமென நிற்பது

சீலமா அநுகூலமா நல்லகாலமா
ஜெகஜாலமா பெண்ணே
தீராதடி என் பழி வரும்
கோராயுணர் உனதென்பது
தினதினில் கணத்தினை
உலகத்தினில் கழிக்கிறேன் கொ

பல்லவி

10. கண்மணியான ருக்மணி உனக்கிதை நான்
கையாரச் சூட்டு வேணினி கருதிடுமென திரு கண்

அநுபல்லவி

அன்மை அநேகரேனும் அஷ்ட லக்ஷ்மிகளின்
அன்பு மிகவும் பிரியம் உன்பிரியம் போலவே கண்

சரணம்

தேவேந்திர பாரிஜாதம் இதுபோலுண்டோ
பூவேந்திர புவினோதம் ஆலோசிக்கையில்
சார்வாஞ்சம் பங்கியிட்டு
தங்கச் சீப்பிலே சீவி
நேர்வேன் உன்கொண்டையிலே
பார்வை ஒய்யாரமாக கண்

பிளேட் நெ. 2865 காம சுந்தராங்கி உனது
(பாகம் 1 and 2) தன்யாசி இராகம்

பல்லவி

11. காம சுந்தராங்கி உனது காதலோங்கி
யேமன முருகுது அறிகு வாயினி கா

அநுபல்லவி

கட்டுப் பட்டேன் கணைமலர்
பட்டுத் தட்டுக் கெட்டவரிதிர் கா
கடுந்துயரம் மிகுந்தது
இளங்குயில் கள் தரும்
தொனியின் மிசை கா
கட்டுப் பட்டிருதனமதை
விட்டுப் பிரி கெறி கா மதில் வீடு கா
கவிக்குளுயர் தாவினைமே
படுத்துமலர் சரப்படைய
விலக்கிடுவாய் மலரணையிதிலுரை கா

---

12. தேமிகுந்துமே சிறந்து
திடஞ் சிறிது ரசங்கொடியது
அகங்குளிர உலகு புகழவரு கா

பல்லவி எடுப்பு

வண்டுமொய்த்த மலர் கூந்தலாளே
மாமதியை நிகரும் முகத்தாளே
ஒண்டுமோ ஜெகத்து மகற்குளே
உடல் பொருளென தென சகலமும்
திடமிதிற் தருகிறேன் அணைய நீ கா

ப்ளேட் நெ. 2513 சாந்தமு லேக (1 and 2)
சாமா இராகம்.
பல்லவி

13. சாந்தமுலேக ஸௌக்யமுலேது
ஸாரஸ தள நயன ஸா

அநுபல்லவி
தாந்துனிகைனவே தாந்துனிகைன ஸா

சரணம்
தாரஸுதுலுதந தாங்யமு லுண்டின
ஸாரெகு ஜெபதப சம்பத கல்கின ஸா
ராஜாதி ராஜ ஸ்ரீ ராகவத்யாக
ராஜவிநுதலாது ரக்ஷகதனருப ஸா

நெ. 2721 ஸ்ரீ ரகுவர சுகுணலய பாகம் (1 and 2)
பைரவி
பல்லவி

14. ஸ்ரீ ரகுவர சுகுண லய ராம
ஸரஸிஜ லோசந விரோச நாப ஸ்ரீ

அநுபல்லவி
தாராணலேனி பாராகுயா டதி
பிரார நனும் ரோவகராதா வரதா ஸ்ரீ

சரணம்
ஆகம மூலா அவனிதலோலா
வேகம தெலுசுக்கோ த்யாக
ராஜ ஸ்ரீத்த ஸ்ரீ

துப்பறியும் நாவலில் சிறந்து விளங்குவது எது?
ருக்மிணீகாந்தன்
அல்லது
ஆபத்தில் காக்கும் அன்பர்கள்.
அழகிய 5 ஆப்டோன் படத்துடன்
விலை ரூ. 2-0-0

பிளேட் நெ. 2610 தினமணிவம்ச பாகம் 1 and 2

இராகம் ஹரிகாம்போதி

பல்லவி

15. தினமணி வம்ஸ திலக லாவண்ய
தீன சரண்யா

அநுபல்லவி

மனவினி பாகுக மதினி தலஞ்சிதே
சனுவுன னேனை சாலு கௌ ஜாலு தி

சரணம்

சார்வ விநுதாநனுஞ்ம் ரக்ஷிஞ் சுமு
கர்வமு யேல காசுவா ரெவரே
நிர்வி காரகுண நிர்மல கரத்ருக
பர்வத த்யாகராஜ ஸர்வஸ்வ மௌ தி

பிளேட் நெ. 2610 சனிதோடி பாகம் 1 and 2

இராகம் ஹரிகாம்போதி

பல்லவி.

16. சனிதோடி தேவே ஓ மனஸா ச

அநுபல்லவி

கனிகரமுதோ கனிகரமிடி சிர
காலமுலூசுக மநுபவிம்ப வேகமே ச

சரணம்

பதிலுலப்ரோசே பட்டாதி காருனி
பரமார்த்தமதவி சிஷ்டாலு லாரினி
த்யுதிநிர்ஜித் சதசம்பராரினி
துரீணத்யாகராஜ ஹருக்சாரினி ச

மதுரை மிஸ் A. சுந்தரம்.

பிளேட் நெ. 2275

ஞானக்கடலோரனே 1 — இராகம் தோடி

கையில் பணமில்லாமல் 2 — சஹானா தமிழ்பதம்.

பல்லவி.

17. ஞானக்கடலோரனே முருகா உனை
நாடி வந்தேன் இங்குகார் உபகாரனே ஞா

அநுபல்லவி.

தீனதயாள திருச் செந்தூர்வேலனே
தேன்மொழியாள் குற வள்ளிமணாளனே
தீவினை நீக்கும் பொருளே வந்தாளெனை
சித்தனே முத்தனே கர்த்தனே
நத்தினேன் பித்தனைக் காத்தருள் ஞா

பல்லவி.

ஷை பல்லவி

இரவும் பகலுன்னையே இந்த
ஏழை நெஞ்சம் கசிந்துருகினேன் ஞா

ஷை அநுபல்லவி

பரவும் பராசக்தி பாலப்பெருமானே
வரவும் தரகதி வாவென்றழைத்தோனே
புரமெரித்தோர்க்கு ப்ரணவ முரைத்தோனே
போக மயில் வாகனே சுக
யோகனே பாலாபி ஷேகனே ஞா

பல்லவி

18. கையில் பணமில்லாமல் கலவி செய்ய வந்தீரோ
கடனானல் எழுந்திரும் சாமி கை

அநுபல்லவி

அய்யரே தென்பழனி அருமை குமரேசரே
அம்மாள் மகளானாலும் சும்மாவரப்போமோ கை

சரணம்

தெந்தினட்பாட்டுப்பாடி திருகாமமிடவந்தீர்
சிரித்து சிரித்து என்னை வருத்தி கூடவே வந்தீர்
அந்த காரணத்தாலென் மனதை மயக்க வந்தீர்
ஆர்யக் கூத்தாடினாலும் கார்யத்தை விடலாமா கை

பிளேட் நெ. 2864

தானே வருகிறாரோ } { நேற்றுராத்திரிபோன
கல்யாணி } { காம்போதி

பல்லவி

19. தானே வருகிறாரோ நான்வரவோ
அவரைத் தையலே கேட்டுவா போடி தா

அநுபல்லவி

தேனூர் மலர் சோலைசூழ் வேலூர் முத்துகுமாரர்
திருமயிலின்மேற் பவனிவரு மயிலேந்தும் வீரர் தா

சரணம்

காம பூதம் வந்து தேடிதிரியுதடி
கடிமலர்களை வாரிச் சொரியுதடி
ஆமடி கணவன்மேல் ஆசை வருகுதடி
அந்தரங்கமெல்லாம் யாருக்குத் தெரியுமடி தா

பல்லவி.

20. நேற்று ராத்திரிபோன [illegible]
நிலவரமாக உற்றுப் பாரும் நே

அநுபல்லவி.

இருட்டுவேளையில் நீர் திருட்டுத்தனமாய்
செல்லும் திருட்டெல்லொம் வெளியாச்சு
மிரட்டாதேயும் ஸாமி திருட்டுபாலும்
சினிதேனு பாகு கல்கண்டு பிரட்டி
வாயிலூட்டியப் பெண் வீடந்த வீதியில் நே

பெங்களூர் தாயி

பிளேட் நே. 2747 எவரினி (1 and 2)

நடசிந்தாமணி

21. எவரினி நிர்ணயிஞ்சி ராநி
ன்னெட்லாரா திஞ்சிரிரா நாவர எ
சிவுடன்யோ மதவுன்யோ கமல
பவுடன்யோ பரப்ரஹம்மன்யோ நீ எவ
சிவ மந்த்ர முனகு மாஜீவமு மா
தவ மந்த்ர முன ராஜீவமு தினி
விவாமு தெலிஸின சுநுலகும் ரெக்கெத
விதரணகுண த்யாகராஜ விநுத எவ

கிராமபோன்

Harmonist
— காதர்பாஷா
உறையூர்

பிளேட் நெ. 2437 கல்லோ சொல்லாய் 1 and 2

செஞ்சுருட்டி

பல்லவி

22. கல்லோ சொல்லாய் மனது கார்த்திகேயனே
முருகா க

அநுபல்லவி

வில்லாளி யார் விஜயன்
தீராதி தீரனே என் சொல்லாலுதரனே
கண் ஜோதி திரு மால்மருகா க

தொகையரு

கருணாகரா பழனிக் கடவுளே
எனதுமுறை உன் காது கண்
செவிடானதோ க

ஷை

23. முருகா வென உன்
சித்தமுள்ள மேயென தெய்வ
உண்மைப்பயன் மெய்யானதோ க

———

பிளேட் நெ. 2488 { இனிபோதம்-ஹரிகாம்போதி.
பக்தர் பஜனை—மத்யாவதி

பல்லவி

24. இனிப்போத மருள்வாய்
என் பாலி ரங்கி இனி

அநுபல்லவி

தினைப்புனத் துணைக்கவண்
செலுத்துமக் குறக்கனி
மனத்தகச் சுயவர மளித்த வித்தகா குகா இனி

சரணம்

இறப்பதும் பிறப்பதும்
எடுத்த ஜென்மத்தின் முறை
இகத்தில் மாயாவினோத இருளெனு மொருகுறை
மறைப்பதை யகற்றியுன்
மாக்ஷிகண் காக்ஷிபெற
மதுரிதம் பொழி செஞ்சொல்
துதி சுதந்தரம் நம்பினேன் இனி

பல்லவி

25. பக்தர் பஜனை பாடுறார் திரு
பழனிமலையில் நித்தம் பக்

ஸ்ரீமதி வை. மு கோதைநாயகி அம்மாள் எழுதிய
கோபாலரத்னம் விலை அணா 14.
அவசியம் வாங்கி வாசியுங்கள்
அதிக இன்பசுவை பொருந்திய நாவல்.
அதிஅழகிய 5 ஆப்டோன் படங்களுடன்

விலாசம்:—ஸ்ரீ வாணி விலாச புத்தகசாலை,
திருப்பாதிரிப்புலியூர்.

அநுபல்லவி

நிஜமான தெய்வம் நீயே
நீர் நில மதிலோ நேரில் வரங்
கொடுக்கும் ஆறுமுக நாதனைத் திரு பக்

சரணம்

காலேயும் மாலேயும் மேலவர் வேதத்தை
கருதிடும் பாஸ்கர சாமி சங்கீதத்தை பக்

பிளேட் நெ. 2769 தயவில்லாததேனை சுருட்டி.

பல்லவி

26. தயவில்லாதேன வஞ்சம் இது
தானே தெய்வ நெஞ்சம் கொஞ்சமும் த

அநுபல்லவி

கயிலே நாதனருள் சுதனே என்
கவலே தீரவே மயிலின் மீதிலே
கணங் தனி விணங்கி வங் தருள் செய த

சரணம்

ஆதாரம் வுனேயன்றி அவனியிலேது
அந்தர மர்மமதை அடியனுக்கோது
சோதனே செய்திடலாமா புகழ்
சுந்தரன் துதி செந்திலம்பதி
துலங்கும் மங்கள பெருங்குமரனே த

மதுரை புதுக்குயவர் பாளையம்
மாரியப்ப சுவமிகள்
பிளேட் நெ. 2618
வேலா உந்தனை—தேசியக்கல்யாணி
மாமயிலேரி—இந்தஸ்தான் காம்போதி

இந்துஸ்தான் பியாக்.

பல்லவி

27. வேலா உந்தனே நம்பினேன்
இங்கு நீ வா வா சுந்தரனே வே

அநுபல்லவி

மேருவை யெடுத்த நாரணன் மருகா
கோருவோன் யெனக்குக் காரணன் மருகா
வேண்டினேன் உந்தனை நானே
எனை ஆண்டிடும் செந்திற் கோமானே வே

சரணம்

வேதியர் ஓதிடும் நீதனே உன் பாதம்
தா தா தம்பிரானே
யாரும் புகழுன தாறுமுகமுமீ
ரூறு கரமுங்கொண் டாறு தலை சொல்
ஏறு மயிலுடன் வாரும்
வரமிக தாரும் அரனுக்குக்
கூறும் சத்திவடி வே

பல்லவி

28 மாமயிலேறி நீ வாவடிவேலா மா

அநுபல்லவி

வாவடிவேலா மாதுமை பாலா
மனக்குறை யகற்றிட வாவடிவேலா மா

தோகையறு

அந்தோ யான் படுந்துயரம் நீ
அறியாததோ—
வந்தாண்டெனை
இனியாகிலும் உன் மலரடி சேர் மா

பாட்டு

மதிமிகு ஐயா வரமருள் சேய
மனக்குறை யகற்றிட
வாவடி வேலா மா

தொகையரு

காகமுறு வனுனை யெக்காலம் காண்பேன்
ஓம் எனும் பொருளுரைத்த உத்தமனே மா

பாட்டு

உனைநிதம் பணிந்தேன் உளமகிழ் கனிந்தேன்
உருகிட வரமருள் வா வடிவேலா மா

முதல் பாகம் முற்றிற்று.

வந்துவிட்டது! நவீன துப்பறியும் நாவல்!!

உலகோர் மெச்சிடும் உன்னத நாவல்!

அதிதீரவீர பாரத புத்திரியின் கற்பனை கதை

அதி அழகிய ஆப்டோன் படங்களுடனும் சித்திர

மேல்போர்வையுடனும் கூடிய

அறுபது

தலைவாங்கிய அற்புதவல்லி.

இதில் எல்லாம் ஆச்சரியம்! எல்லாம் பயங்கரம்! எல்லாம் நடுக்கம்! எல்லாம் ரகசியம்! எல்லாம் ஸ்தம்பனம்! எல்லாம் அதிசயம்! படிக்க இனிப்பு! பார்க்க பிர்மிப்பு கடைசியில் எல்லாம் விழிப்பு! படித்தால் உண்மை விளங்கும் அதி அற்புத நாவல்! விலை ரூ. 1-8-0

உ

கணபதி துணை.

கிராமபோன்
கீர்த்தனும்ருதம்

(2-வது பாகம்)

—:o:—

சங்கீத வித்வான்

S.V. சுப்பைய பாகவதர்

பாடிய பாடல்கள்.

பிளேட் நெ. 1707 இராகம் செஞ்சுருட்டி தாளம் ரூபகம்.

(பாகம் 1 & 2)

பல்லவி.

29. பித்தந்தெளிய மருந்தொன்றிருக்குது
பேரின்ப மன்றுள்ளே பித்

அநுபல்லவி.

மற்ற மருந்துகள் தின்றாலு முள்ளுக்கு
வல்லே வல்லே ஐயோ அடிமை பித்

சரணம்.

பாம்பு புலியு மெய்ப்பாடுபட்டு தேடி
பார்த்துப் பயிரிட்டது—அந்த
பாரளந்த திருமாயனும் வேதனும்
பார்த்துக் களித்த துண்டு

பார்வதி யென்றொரு மொட்டியதில்
பாதியைத் தின்றதுண்டு— இன்னம்
பாதியிருக்குது பறையா நீயும் போய்
பாரென் றுத்தாரம் தாரும் பித்

பிளேட் நெ. 2888 காதலின் பாக்கியம் பாகம் 1&2 சாமா

பல்லவி

30. காதலின் பாக்கியம் சுதி தரும் யோக்யம்
காணுவாய் இன்பமே சிலாகியம்
பெரியோர் வாக்கியம் கா

அநுபல்லவி

ஆதலினாலெனை ஆதரிப்பாய் கண்ணே கா

சரணம்

பேதலிக்காதே உன்னை
பிரிந்திடேன் சத்யமிதே
பேசும் மதன்யோக பூசிதம் செய்வோமதை
ஈடில்லா பாஸ்கரன் சொல்
தேவியே என்னுவியே கா

பிளேட் நெ. 2616 இராகம் சுருட்டி-தாளம்-ஆதி

பல்லவி

31. வனிலம் புலம் கார்க்கும் வள்ளி
எழில் என்ன சொல்லுவேன் வ

அநுபல்லவி.

மீனலோசனி பாலனை
வேலவனு க்காய்
ஜனித்து சால வுறக்காய் மதித்து வ

சரணம்

அஞ்சுகமும் தன்குல மென்றிவள்
அருங்குரல் கேட்டு வருகுதே
அடர்வனத்திலுள்ள மானினங்கள்
அக்கண்ணைக் கண்டு முருகுதே
மிஞ்சும் சௌந்தர்யம் பெருகுதே
வெற்றிக் குகனே யுருகிங்கு
கத்திக்குரல் சோர வருகுதே ஏ

பிளேட் நெ. 2616 இராகம் சுருட்டி தாளம் ரூபகம்

பல்லவி.

32. சொல்லும் வார்த்தையைக் கேளம்மா தள்ளாதம்மா
சொல்லும் வார்த்தையைக் கேளம்மா சொ

அநுபல்லவி

அல்லும் பகலும் இந்த அவஸ்தையை நீ விடுத்து
அவனியில் தொழிலற்று இருப்பாய் நீ செவிகொடுத்து சொ

சரணம்

உனக்காகவே நான் சொன்னேன்
ஓஹோ இந்த க்ஷணமே
மனக் கவலை கொள்ளாதே
மானிலத்தி யல்புதான் சொ
வேறொரு வருக்காக
வேண்டினேன் இல்லையம்மா
ஆறுமுகனே சொந்த உன்
ஆசை மணாள னம்மா சொ

பிளேட் நெ. 2510 இராகம் தன்யாசி தாளம் ஆதி

பல்லவி.

33. நிச்சயமாய்ப் பட்டகடன் இட்சணம் நான் தீர்ப்பதற்கு
நீ தானொரு மார்க்கம் சொல்லடி நிச

அநுபல்லவி

கச்சைகட்டி ஆடும் தாசி இச்சைப்பட்டு ஆனேன் தோஷி
லஜ்ஜையுற்றேன் ஊரா ரேசி மிச்சம் நிந்திப்பா ராலோசி நிச்

சரணம்

பெண்டு பிள்ளை முன்கால
கண்டையருக் கரிச் சந்திரன்
பிரியமாய் விற்றதெதற்கு
பின்பவன் பறையனுக்
கடிமையாகி அங்குவந்த
பிரேதங்களை சுட்டதெதற்கு
கொண்ட கடனுக்கு சத்யம்
குறைவு படாத தற்கும்
அண்டினு னல்லாமல் வேறே
அவனுக்கென்ன எனக்கும் நிச்

---

34. பிளேட் நெ. 2405 இராகம் பைரவி.

காயாத கானகத்தே நின்றுலாவும் நற்காரிகையே அது
மேயாதமான் புள்ளி மேவாதமான் விழிமான்—நல்ல
சாயாத கொம்பிரண்டே யிருந்தாலும் தலை நிமிர்ந்து
பாயாதமான் வந்துண்டோ உந்தன் பார்வையிலே.

---

35. பிளேட் நெ. 2405 இராகம் சங்கராபாணம்

எந்த மானிடவேடர் நீர்காண் உமது வேட்டைக்
கேற்றமான் அம்மலையிலுண்டு
இந்தமான் நம்பி தந்தமான் உமது வலைக்கு
அகப்படாத மான் இளையமான்
அந்தமான் நல்ல சௌரியமான்
தைரியமான் அதிவீர மான்
சொந்த அம்மான் மகன்போல ஏதேதோ பேசுகிறீர் என்
தோழி மானை விட்டு தூரத்துவேனே.

பிளேட் நெ. 1708 இராகம் செஞ்சுருட்டு தாளம் ஆதி

பல்லவி

36. மாரன் விடுகணை பாயுது—மாமயிலே
எதிர் வந்தென்னைத்தாவி மாரன்

அநுபல்லவி

ஈராறு மங்கையின் பாதம் பணிந்திட்டேன்
நேரிட்டு இங்கென்னை ஏறிட்டுப் பாரடி மாரன்

சரணம்

வெந்திடும் தீப்படும் கொம்புறப் பாயுதடி
மனம் வெகுண்டுன்னைத் தேடுதடி
அந்த மதிக்கும் மலைக்கும் கடற்குள்ள
அர்த்தப்பட நீ வருவது வெற்றிகிடமே திடுக்கிட
ஆரியர் பூசிக்கும் வீரிய சித்திரமே
உள்ளன்பர் கோரும்
காரியர் நாயகமே வருவாயடி
கண்ணும் பொன்னும் பொடி
எண்ணும் படிவரும் மாரன்

உறையூர் டி. எம். காதர்பாஷா

பாடியது

பிளேட் நெ. 1706 இராகம்-சகானா தாளம்-ஆதி

ஐயா பழநி மலை வேலா எனக்
கார் துணை சொல்லறு கூலா
துய்யா பன்னிருகை வேலா உன்னை
தோத்திரம் செய்தேனுமை பாலா
பெண்டு பிள்ளை ஆசை மேலிட்டு நான்
பித்தனாய்த் திரிந்தலைந்தேன் கெட்டு
எண்டிசையுமுன் பாதம் தொட்டு
இரு கரங்குவித்தேன் கும்பிட்டு ஐயா

பிளேட் நே. 2547 இராகம்-காம்போதி தாளம்-ஆதி

பல்லவி.

38. முருகாவென் றுரைத்து மூர்த்தியைத் தொழுதால்
முன்செய்த தீவினை போமினிமேல் முரு

அநுபல்லவி

வருவாய் மயிலேறி வல்வினை தீர்ப்பாரே
தருவார் பல வரங்கள் தயாபரன் காப்பாரே முரு

தொகையறு.

நாதா ப்ரபோதா விநோதா
வேதாந்த ரூபா வேணிதனையா அதீதா
திருமங்கைலக்ஷ்மி தீன தயாளனே
மருகா முருகா வருகா செவ்வேளா
பருவரல் மேலா
பார்வதி பாலா
உருகாதா வேலா
உம்பர் சீலா முரு

பிளேட் நே. 1751 இராகம்-பியாக் தாளம்-மிஸ்ரகதி சாப்பு

பல்லவி.

39. ஆலவாய் மதுராபுரி நகர் அம்பிகா எனையாதரி ஆல

அநுபல்லவி

அம்பிகா எனையாதரித்திரு வருள் புரிந்து பராபரி ஆல

தொகையறு.

சீலமாய் அறுபத்து நான்கு திருவிளையாடல்
செய்த சொக்கேசர் பாரி
தேவரோடு மானிடர் செம்மை பெறவே
திருக்கருணை யளித்த மேரி

அநுபல்லவி முடுகு

காலை மாலை சதா நீயே கதி காவலி கருணாகரி
காவலி கருணாகரி கிருஷ்ண பாஸ்கர சகோதரி ஆல

பிளேட் நெ. 1903 இராகம் மால்கோஷ் தாளம் ஆதி

பல்லவி

40. வா வா கார்த்திகா செழும்
மரகத மயில்மிசை தருணமெனது முனம் வாவா

அநுபல்லவி

பூவிலிவ் வாழ்வு பொய்யென்றே தாழ்வு
புனிதம்பெற பூஜித்தேன் புகழ் கடம்பனே
மகிழ்திடம் தந்தருள் வாவா

சரணம்

தஞ்சமுன் பாதம் சாற்றிடும் போதம்
தண்டமிழ்ப்பதமே சுந்தரன்
ஸ்தான பக்திச் சித்தச்
சோக மகற்ற விச்சுப தினதில் வாவா

T. S. ரெங்கம்மாள் பாடியது.

பிளேட் நெ. 2071

41. இராகம் இந்துஸ்தான் தோடி தாளம் ஆதி

ஒலமிட்ட சுரும்பு தண தண வென
வேசிரத்தின் விழுங்கை பளீர் பளீ ரென
ஓசை பெற்ற சிலம்பு கலீர் கலீ ரென விரகலீலை
ஓர்மிடத்து லெழும்பு கூ கூ கூ கூ வென
வேகுதிக்க உடம்பு வெளீர் வெரென
ரோமகுச்சு நிறைந்து சிலீர் சிலீரென அயிர்தமாரன்
ஆலயத்துள்ளிருந்து குபீர் குபீரென
வேர்வைமெத்த விழுந்து சலார் சலாரென
ஆரமுத்த மணிந்து ஆளா ஆளாவென மருவுமாரன்
ஆசையிற் கைகலந்து சும்மா சும்மாபவ
சாகரத்திலழுந்து ஏழா ஏழாதுளம்
ஆறெழுத்தை நினைந்து குகா குகா வென வகை வருதோ

Madras A. S. ராஜப்பா

பிளேட் நெ. 2810 இராகம் இந்துஸ்தான் காபி தாளம் ஆதி

பல்லவி

42. கந்தா காருண்யனே கனசேவலனே

அநுபல்லவி

செந்தூரர் புண்ணியனே கொடி காவலனே கந்

சரணம்

ஆதியோடாதியான ஐயனே முருகையனே
பொன்னே பூம்பதமே உன்னைப் போற்றினேனே
என்மேலேன் கதமே பணிந்தேற்றினேனே கந்

தொகையறு

காக்ஷி யோதக டாக்ஷி மாக்ஷிகொள்
கந்தனே சிவ மைந்தனே
சாக்ஷியேது மீனாக்ஷியாள் தரு
சந்தனே பிர பந்தனே

சரணம் தொடர்ச்சி

தந்தாளாய் சரணம் இன்னும் தாமதமா
பண்கேளாய் தருணம் அசம்பா விதமா கந்

பிளேட் நெ. 2810 இராகம் செஞ்சுருட்டி புன்னாகவராளி

தாளம் ஆதி

43. நாத சங்கீத பொன் மணிமண்டபம்
நயனத்திடையினில் நடனங்கண்டே
நாவை மடக்கிய மேல்வாசல்
நளினமது வருந்த அருள்வாயே
ஞான வேலா ஞானவேலா
நவமணி பதித்தொளிர் ஞானவேலா நாத

முத்தொடு பவளமும் பச்சையுமாய்
முச்சுடரொளிமணி முழக்கமெனும்
சுத்த அற்புத சுசவித நாதம்
தொனிக்கு தெனக்குள் சுதிலயத்துடனே
சோதியாதே சோதியாதே
சுதனெனை இனி பரிசோதியாதே

பிளேட் நே. 2889 இராகம் பியாக் தாளம்

பல்லவி

44· சிக்கந்த மலைக்குகையி விருப்போனே முருகா
அக்கந்த மலைக்கண்ணன் விருப்பான மருகா சி

மகுடங்கள்

தெள்ளுமாமணி ரஸ்யா தீத
புள்ளி வாசலின் னிஸ்லாம் வேத சி
திக ளுமுகம நிந்தஸ் தான்
புகளு முடைய குண மஸ்தான் சி
தக்கன் தவமழித்திட பர
ளுக்கந்த ரகசிய மெனு மொ
ழிக்கந்த மலை யொழி பிரப
லக் கந்த மகிதல பெரு மை சி

தொகையறு

மகா ஜனக்கூட்டமே முதிர் கார்த்திகை தீபமாம்
மாமாங் கநற் பொய்கை
சதா கோடி சங்கமே அரோஹரா வென்றுதுதி
சாஷ்டாங் ஞானச் செய்கை சி

சரணம்

சாலக் குற வஞ்சி மணு
ளாலக்ஷண விஞ்லச குணு சி

திருச்செந்தூர் மிஸ்ஷண்முக வடிவு பாடியது

பிளேட் நே. 1803 இராகம் பேகடா தாளம் ஆதி

பல்லவி

45. மனமான ஒரு சிறுவன் மலரடியைப் பிடித்தும்
மதியாம லிருக்கலாமோ முருகா மன

அநுபல்லவி

உனையே தினம் கொண்டாடி உள்ளமுருகப் பாடி
கனிகர மில்லாததேனோ கந்தாஉனக்குநீதிதானோ மன

சரணம்

நம்பியிருந்த எனையே நட்டாற்றில் விடவும் போமோ
அம்பா பார்வதி தனையா அடியேனைக் கைவிட லாமா
உம்பர் மனோகரனே உனக்கு நான் என்ன வேமா
எம்பிரான் முருகையா என் மேலின்னமும் வீமா (மன

பிளேட் நே- 1804 இராகம் ஸ்ரீராகம் தாளம் ஆதி

பல்லவி

46. உன்னடியை வழி கண்டு உளம் நொந்து வாடுகின்றேன்
உமாமஹேஸ்வரி தனையா உன்

அநுபல்லவி

பன்னக சயனன் பேரில் பள்ளிகொண்டமால் மருகா
என்னாளும் மறவாதிருக்க எனக்கு வரம் தா முருகா உன்

சரணம்

அமரரிடை தீர்த்தவனே
குமரக்குருபர தேசிகனே
சமரா புரியனே சண்முகனே உன்
மாயபிரபஞ்ச வாழ்க்கையிலே கெட்டேன்
மனம்போனவாறுக மாறி நின்னடி தொட்டேன்
தீயவழிகளையே தீனனே நான் விட்டேன்
ஆயன் மருகா முருகா அருள் மொழிக் குட்பட்டேன் உன்

பிளேட் நே.1835 இராகம் அடாணா தாளம் ரூபகம்

பல்லவி

47. முருகன் திருமால் மருகன் பெருமை—அந்த
முக்கண்ணனுக்கு மில்லை தணிகாசல முரு

அநுபல்லவி

இருபோது மன தவரைக் கண்டால்
இலகும்படி களிபொங்கிட வளருந்திரு தணிகாசல முரு

சரணம்

புன்னகை மேவும் வதனவிம்பத்தின்
பொருந்து மந்த ஹாசன்—செழும்
பொன்னொளிர் மேவும் பன்னிரு கரங்களும்
பொருந்துங் கிருபாவேசன்
சன்னதியில் வந்து தங்கு மூலாசன்
தவஞ் செய்யுந் தொண்டார்க்கருள் முருகேசன்
உன்னைக் கண்டால் வில காதவர் நேசம்
உலகத்தினி லிவருக்கிணை எவருற்றவர் தணிகாசல முரு
கார்த்திகைப் பெண்க ளறுவருங்கூடி
களிக்க வரும் பாலன் எங்கும்
காணக் கிடையாத மாதரை வேறாக்
கண்டவடி வேலன்
ஆர்த்தகை சூரரை அன்றே கொல்லுங் காலன்
ஆடுமயில் மீது ஆரோகணியுங் கோலன்
கோர்த்த கடம்ப மயிலேறுந் திரிசூலன்
குகனற்றவ ரகமுற்றிட புகழ்பெற்றிடுந் தணிகாசல முரு
குட்டியே பிரமனை முன் சிறையிலிட்ட
கோகனக னற்ற வேதன்
குற்றமில்லாமலே சிவனுக் குபதேசம்
செய்த குரு நாதன்
எட்டுத் திசையும் புகழும் நன்னீதன்
ஏந்திழை தெய்வானை மகிழும் விநோதன்
மட்டிலடாணா ராகப்ர சங்கீதன்
மதுரைத்தமிழ்முனிவர்க்கருள் சிவப்ரமணியன்பெயர் முரு

K. T. நடராஜம் பிள்ளை பாடியது

பிளேட் நெ 3674 இராகம் ஸ்ரீராகம் சாப்பு தாளம்

பல்லவி

48. திரிலோகமும் புகழும் சுந்தர
தீர வீர சூரனுனே திரி

அநுபல்லவி

இன்னாட்டுக் கதிகாரன்
விண்ணாட்டுக் கதிசூரன்
நன்னாட்டுக்கு மதிகாரன்
நாகரீக சம் போகன் நானே திரி
தரணி புகழ் கெம்பீரன்
அரிவையர்க் கிசைந்த மாரன்
பரி பூரண சுகவுதாரன்
பாதமீதில் ஓதும் வேதன் நானே திரி

S. R. கமலம் பாடியது.

பிளேட் நெ. 5254 இராகம் காப்பி தாளம் ஆதி

பல்லவி

சென்று கனி பறித்துக் கொண்டு -- நான்
சீக்கிரம் வருவேனுனு மின்று அவர் சென்

அநுபல்லவி

கன்றையிழந்த பசுபோல
கலங்குவார் தாய் தந்தையின் நாளே
கட்டழகியாளே
இட்டமுடன் மேலோர் பசி
தீர்ப்பதென் கடமையாலே நான் சென்

சரணம்

தந்தை தாய்க்குத்துணை யாரு நீ
  தனித்திருந்தவரைக் காரு அவர்
சிந்தை கலங்குவார் வேறு
  சிஸ்ருஷை செய்வோரார் கூறு
சிறுத்தை புலி சீறும்
  தீவினைகள் சேரும் இங்கு
தீரத்துடனிரு போய் வாரேன் நான் சென்

பிளேட் நெ. 5095 இராகம் கமாஸ் தாளம்-ஆதி

பல்லவி

50. கை வரிசை செல்லாது போம் ஓய் நாரதரே கை

அநுபல்லவி

மெய்யது துடித்துமே மெல்லியை யடுத்துமே
தையலைக் கெடுக்க தைரியமாய் வந்தீரே கை

சரணம்

கூட்டிக் கொடுப்பதுங்கள் கோத்திரத்தின் முறையோ
ஆட்டிப் படைக்கவேண்டாம் நீட்டிக் கெடுக்கவேண்டாம்
ஆவலாயோடி வந்தீர் உமக்கென்ன அக்கரையோ கை
எனக்கு வந்திந்த புத்தி இணக்க வந்தது போதும்
இனியிங்கு நில்லாதே எடுத்தடி பின்வையும் கை

விசலூர் N. சுப்பிரமணிய

பாகவதர் பாடியது.

பிளேட் நெ. 2781 இராகம் பியாக் தாளம் ஆதி.

பல்லவி

51. இதுதானோ தில்லை ஸ்தலம் இத்தனை நாளுமறியேன்
இதுதானோ தில்லை ஸ்தலம் இது

அநுபல்லவி

அதுவோ இதுவோ வென் றலேந்திடும் பேயனேக்
கதி தருவேனென்று கைகாட்டி யழைக்குது இது
காசினியிலிதைக் கைலேயென்றெல்லோரும்
பேசக் கேட்டேயன்றி பேணிப்பார்த்தறிகிலேன் இது

பிளேட் நெ. 2781 தேசிகதோடி தாளம் ஆதி

பல்லவி

52. அடித்தது போதுமையா என்னே
அடித்தது போதுமையா அடி

அநுபல்லவி

அடித்தாலும் உங்கள் கைவலியாதோ
அடிமை வேலே செய்யு மென்னுடன் வாதோ
படித்ததெல்லாமென் மனதிற்படாதோ
பாவியெனக்கு மினி மேற்றெறியாதோ அடி
நல்ல வரமுங்கள் மனதுப் பிரகாசம்
நடக்காமலிருந்தது வப சாரம்
சொல்லத் தெரியுமோ எனக்குபகாரம்
சுகிர்த சாலி யுங்க ளாலேயிக்நேரம் அடி

எரஞ்ஞுளம் K. V. நாயுடு

நெ. 2838 } முருகனிடமேன் இராகம் காம்போதி தாளம் ரூபகம்
சோம சுந்தரா—கேதார கௌளம்

பல்லவி

53. சோமசுந்தர சர்வேசா
தூயமங்கள தினந்துதி மதுரை சோ

மகுடங்கள்.

தொடர் பவவினை பொடி படவருள்
சடை மிசை மகுட மணியுங் கடவுளே சோ
துலங்குமிங் கிதம்பெருஞ் சதங்கைகொஞ்சன்
பதந் துணையருள்
சோதித்து வாதிப்ப தேனிது
நீதிக்குத் தானொப்புமோ புகல் சோ

அநுபல்லவி

தேமிகுந்திட நால்வர் மகிழ்ந்து
தேவாரப்பாசுர துதி நாவாரப்பேசி கதியருள் சோ

சரணம்

என்றுந்துதி செய்தேனே நெடுநாளாய்
என் முறையைச் சற் றிரங்கி நீ கேளாய்
நன்று சுந்தரன் நம்பிக்கையாளாய்
நாத சங்கீத விநோதபோதா த
யாகிதியே நலமருள் சோ

பல்லவி

54 முருகனிடமென் முறை சொல்வாய் கிளியே முரு

மகுடங்கள்.

முழுங்குகிதி செழும்பழனி
இளங்குமா னெனும் பிரபல முரு
முற்றும் உனை நம்பியவொரு
பக்தன் சொலும் சங்கதியென அந்த முரு
முப்பிறப்பில் கொண்டவினை மூண்டிருந்தால்
இப்பிறப்பில அண்டிடாமல் வேண்டுவதாய் முரு
முக்கியமிது பற்பல துயர்
பற்றுவது ச கித்திட வசமல்ல முரு

அநுபல்லவி

கிரிதருமூலகோர் புகழ்திரு
விளையாடல் மதுரையில்
திருநாளைப் பெருபவள் புதல்வனும்
முத்தர் போற்றும் இப்ர பஞ்சநிதி
சுப்ரமண்யனெனும் முரு

சரணம்

நோயற்றவாழ்வும் குறைவற்ற செல்வமும்
நுண்ணறிவுந் தவப் புண்ணியஞ் சாரவும் தாரவும்
தூயவென் தாய்மனத் துக்கமகற்றவும்
துதுநீயே இனிவேறில்லை
தொண்டர் சுந்தரன் சந்ததம்
துதித்தேன் மதித்தேன்
பட்டணத்து செட்டி சுக்ல
முற்பவித்த வித்வபுத்திர
விதரணகுண நயவருணகிரியே முரு

இரண்டாம் பாகம் முற்றிற்று.

பதிய இனிய துப்பறியும் நாவல்!
ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதியது
ருக்மிணிகாந்தன்
அல்லது
ஆபத்தில் காக்கும் அன்பர்கள்
இணையிலா துப்பறியும் நாவல்
அதி அழகிய 5 சித்திர படங்களமைந்த அழகிய
போர்வையுடன் கூடியது.
விலை ரூ 2-0-0

விலாசம்:—
ஸ்ரீவாணி விலாச புத்தகசாலை,
திருப்பாதிருப்புலியூர்.

உ
கணபதி துணை.

கிராமபோன்
கீர்த்தனும்ருதம்.

(3-வது பாகம்)

சங்கீத வித்வான்
S. V. சுப்பைய பாகவதர்
பாடிய பாடல்கள்.

பிளேட் நெ. 1750 இராகம் தேசிகமுகாரி தாளம் ஆதி.

55. பல்லவி

அன்னமே நான் தாலிகட்டி
அன்றுவந்த நாள் முதலாய் அ

அநுபல்லவி

இன்னமும் வீட்டுக்கு போகவில்லையே
பத்தினிகர்னகை மாண்டாளென்று
காகிதமும் வந்த தின்று
கண்கலங்கி நோகலானேன்
பெண்ணங்கே போய்வாரேன் அ
இந்தவேளை உத்தரவு
தந்தனுப்ப வேணுமடி
என்னையும் அடிப்பவர்கள்
இவ்வுலகில் உண்டோ கண்ணே அ

சரணம்.

எந்தன் சாதியார் கூடிவந்திருப்பார் கோடானகோடி
சுந்தரி நான் போகாவிட்டால் பந்தி போஜனம் விலக்கி
எந்தனை ஏசுவார்கள் மேலும்
அவளுக்குக் கொள்ளி வைக்க
மைந்தன் தானங்கேது வேணும்
வேணும் உத்தரவு தந்தனுப்பவேணும் அ

பிளேட் நே. 2972 கட்டிக்கரும்பே தேனே
இராகம் அடாணு தாளம்
பல்லவி.

56. கட்டிக்ரும்பே தேனே
கனியே மோகினிமானே கட்டி

அநுபல்லவி.

அட்டி செய்வதேன் அருள் விழியாளே
ஆருயிர் தர்மம்தனை விழியாளே
மட்டிலாதமொரு மத விழியாளே கட்டி
பாரிலுனை வணங்கிடும் ததிசு குமாரி
இளம்பரங்கு மிகு வரத நேரில்
எனதருமை தெரியாமலே
இனிக்கருணை யுதிக்கும் தமிழ் பாஸ்கர கட்டி

பிளேட் நே. 2972 இராகம் தோடி தாளம்
பல்லவி

57. சிங்காரி ஒய்யாரி

அநுபல்லவி

ஜெகத்தை மயக்கு மிந்த
முகத்தை படைத்திட்ட சிங்
சேலை தந்திட வந்த
பூவை யிங்கித பரிமள சிங்

சீனியுடன் முக்கனி
தேனும் கலந்தமொழி
யாளுமிவளையினி யாளுதரிசித்திடத் தக்க சிங்
சித்தரு பூத்தரு
நித்த மகித்திடும்
உத்த மருத்துவ
வித்துவ கிண சிங்

சரணம்

பங்கேருகன் கை தேர்ந்து படைத்திட்ட ராணியாம்
பருவத்திரு வுருவில் பாக்கிய கல்யாணியாம்
மங்காத சங்கீதத்தில் மகிமைக்கோர் வேணியாம்
மனத்துக்கு நீ யே மயிலாள்
கனத்துக் குயிலு மிவளால் இவளை
வஞ்சிக்கும் தென் குடல் பாஸ்கர
சொர்ப்பொரு ளர்ப்புத விற்பன்ன யான சிங்

பிளேட் நெ. 1752 இராகம் பைரவி தாளம் ரூபகம்

பல்லவி

58. ஜய ஜய கோ குல பாலா ஜயஸகலா கம மூல
தயயாமம் கோபால தீனம் பாலய பால ஜய

அநுபல்லவி

தேவமயா சரித மிதம் தீன தியா அபராதம்
ஸ்ரீ வஸுதா திபக்ருபயா கேவலமிஹ ஜாணஹி

சரணம்

ஈக்ஷிதா பகதேஹே ஈச ஜகந்தினிரீஹே
வீக்ஷாசி க்ஷிதமோஹே வேதாந் தகபகேஹே ஜய
ஜக தண்ட கோடிதனே ஜகது தாந்தரஸு தனே
அகணித ஸம்ஜாத மனே அபரிமிதா ஸுருத தேனே ஜய

பிளேட் நெ. 1904 இராகம் கமாஸ் தாளம் ஆதி

பல்லவி

59. பாமா கதவைத் திறப்பாய் அன்பான சத்ய
பாமா கதவைத் திறப்பாய்

அநுபல்லவி.

பூ மண்ட லத்திதுதித்த சீமாட்டியான சத்ய
பாமாகதவைத் திறப்பாய் அன்பான சத்ய பா
தித்திக்கும் செந்தேனே செவ்வரி கண்மானே
இத்தனை வர்மமாகுமோ இதுவும் தர்மமாமோ அவன்
சென்ம கர்மமோ அன்பான சத்ய பா
அமிர்தமும் விஷமாம் அளவது மீறிடில்
ஆகையால் இத்தனை மோடி ஆகுமோ என்னடி
ஆலோசிப்பாயடி அன்பான சத்ய பா

T. M. காதர் பாக்ஷா பாடியது

பிளேட் நெ. 1719 பாலாபிஷேகப் பழனிமலை
இராகம் பியாக் தாளம் ஆதி

பல்லவி

60. பாலாபிஷேகப் பழனிமலையப்பன்
பாதப்பிரசாதம் பரமானந்தம் பால

அநுபல்லவி

சாலோக சாமீப சாரூப சாயுச்சியம்
தந்திடக் கந்தன் ஒருவன் சொந்தம் பால

தொகையறு

வேலா சுசிலா நற்கோலா கலாவா
நாலா காலா ஞான நுலீபவா

முடுகு

விகசித நடமிடு மயிலுறை வாசன்
இகபர மிரண்டிலும் சுகந்தரு நேசன்
ஈசன் முருகேசன்
பேசும் பிரகாசன்
எங்கும் புகழாவி
னங்குடி யான் பால

பிளேட் நெ. 2973 தினகர குலதேவதியே.

இராகம் கமாஸ் தாளம்

பல்லவி,

61. தினகரகுலதே வதியே மீன
லோச்சனியே தாயே தின

அநுபல்லவி.

அனவரதமு முந்தன்
அடியிணை தானே
அண்டினேனே நானே தின

தொகையரா.

மரகத மனோன்மணி திருமதுரையாளும்
மகுட சிங்காரி விரி
மங்காதருள் புரி லிங்கேஸ்வரன் நித்யம்
மருவி விளையாடும் பாரி

பாட்டு எடுப்பு

மதுரித சுந்தரன் தமிழ் மாலிகா
மானே தேனே யம்மா தின

பிளேட் நெ. 2188 இராகம் மத்தியவதி தாளம் ஆதி.

பல்லவி.

62. ஜெகத்குருபர ஷண்முகா செந்தில் முருகா ஜெக

அநுபல்லவி

அபி மன்னன் மருகா அப்பனே வருகா
சந்தமும் தொண்டர் தங்கள் வந்து பஜனை முழங்கும் ஜெக

சரணம்

கந்தனே கடம்பா
கனக பொற் சிலம்பா
சந்ததமும் தொண்டர் தங்கள்
வந்து பஜனை முழங்கும் ஜெக

பெங்களூர் தாய் பாடிய பாடல்

பிளேட் நெ. 5348 இராகம் பியாக் தாளம் ஆதி

பல்லவி.

பைய பைய கிட்டவந்து
நெருங்காதே போடா பை

அநுபல்லவி

உன் பழிப்பு வார்த்தைகளை
யான் அறிவேன் போடா பை

சரணம்

உந்தனை நான் தேடிவந்தேன் என்னுசை மடமானே
சொந்தமுடன் வந்து என்னை சேரடிதேனே பை
எந்தனை சேர உனக்கு நீதியுண்டோடா மூடா
வந்தவன் யாரடா உன்னை நானறிவேன் போடா பை
நீதியுடனே கூடவென்று நிற்கிறேன் கூட
காதல் கொண்டு தேடி வந்து நான் அடுத்தேனே பை
பாதகா என்னைச் சேர்ந்தால் பாவம் உன்னை வந்தே சேரும்
காதகா நீயும் நவிலும்வார்த்தை கஷ்டமாகும் தெரிவீர் நீரும்

இராகம் கல்யாணி தாளம் ரூபகம்

பல்லவி

64. எத்தைக் கண்டு நீ இச்சை கொண்டாய் மகளே என்
கண்ணே பெண்ணே நீ இப்போ எத்தை

அநுபல்லவி

சுத்தப் பயித்தியக்காரன் கங்காதரன்
தோகையே முன்னவன் பேயுடனுடிய
தொந்திக்கோ பழங்
கந்தைக்கோ செய்யும்
விந்தைக்கோ ஏறும்
நந்திக்கோ நீ எத்தை

சரணம்

மாமனு மாமியு மொன்ருய்ச் செய்கின்ற வரிசைப் பெருமைக்கோ
சோமனைச் சிரசில் அணிந்த ஒரு கண் துலங்கும் நெற்றிக்கோ
காமனை வென்ற வரலாத்தை யுண்டு மார்க்காலுக்கோ சாம்பல்
[மேனிக்கோ
கணை காலுக்கோ கரி தோலுக்கோ நீ எத்தை
புலியை யுரித்து ஆடையணிந்த போர்வை மாசைக்கோ
வலியகரத்தில் மழுவையேந்தும் மனது துணிபுக்கோ
மாலையின் பாம்பை பிடித்து கழுத்தில் மாட்டிக்கொண்டதை
பூட்டிக் கொண்டாடிட்ட
மாலைக்கோ தருச் சோலைக்கோ செய்யும்
வேலைக்கோ காமலீலைக்கோ நீ எத்தை

மிஸ் வனஜாக்ஷி பாடிய பாடல்

பிளேட் நெ. 1944 போனுல் வருமோ [காமிக்]

பல்லவி

65. போனுல் வருமோ வாலீபம் ஒரு
போதும் வராதென்ன ஆக்ஷேபம் போ

அநுபல்லவி

ஆனுலிதை நீ யோசித்துப் பாரு
அப்போது தெரியும் ஒப்பில்லையாரும் போ

விருத்தம்

முதிராத வாலிபம் என்னாளும் வராது
முதிர்ந்து சென்ருல்
கதிராக விளையாது கட்டாக விற்காது
கடைத் தெருவே
எதிரில் விலை கொடுத்து கேட்டாலும்
எவரும் கொடார்
ததியான வேலை சந்தோஷித்திருக்க
தக்கநாளி திதுவே போ

(தரு)

காய்ந்து மரத்திலே தொங்காது ஒரு
கடையிலுமே அது விற்காது
வைத்து பறிக்க முடியாது அதை
எழுதவும் எட்டி லடங்காது போ

பர்ல சுந்திரத் தம்பிரான்

பிளேட் நெ. 1692 காயமே இது பொய்யடா

பல்லவி

66. காயமே இது பொய்யடா இது
காற்றடைந்த பையடா
மாயனார் குயவன் செய்த
மண்ணு பாண்டம் ஓடடா
உப்புமண்ணும் ஒட்டை மூங்கில்
ஒட்டி வைத்த கூடடா
உளுத்த நரம்பும் வெளுத்த தோலும்
இழுத்துக் கட்டிய கூடடா இது காய
அஞ்சிபஞ்ச பூதமே யதில்
ஆறுகரடி துஷ்ட புலிகள்
போரு செய்திடும் வாசமே இது காய
அத்தி மரத்தின் கனியைப்போல
ஆடுமே ஒரு ஸ்துலமே
தட்க்ஷணத்தில் வேடரானவர்
தண்டெடுப்பது முன்னமே இது காய

மிஸ் ருக்மிணி

பிளேட் நெ. 2486 இராகம் தாளம் ஆதி

பல்லவி

பூங்காவனக் குயிலே
இளமயிலே கிளியே பூங்

அநுபல்லவி

பங்காய் விளங்கிற குன்றக் குமறகுருபரனை
மருவயிந்தக்ஷணத்தில் அழைத்துவாடி இளம் பூங்

சரணம்

குத்துகலை மீறுதடி தந்தைமொழி என் துரையை
மெத்தையிலிருகி கட்டி முத்தமிட்டு கன்னத்தில்
வைத்து அதரக்கனி அழுத்தி அமுதைப் பெருக்கி
மெத்தவும் நயத்தினின் சுகித்திடவரச் சொல்லடி பூங்
சுந்தர மிருந்திலகும் செந்தில்வளர் கந்தனுடை
அந்தரங்கம் எந்தனது சிந்தையிலெறிந்தே நிதம்
சொந்தமுடன் சுப்ரமண்யர் செந்தமிழுக்குக் கருணை
தந்தருள்புரிந்த முருகனை வந்தணையச் சொல் இளம் பூங்

S. R. கமலம் பாடியது.

பிளேட் நே. 2274 காட்சி கண்காக்ஷியே
இராகம் கமாஸ் தாளம் ஆதி.

பல்லவி

68. காட்சி கண்காட்சியே திருவனந்த புரக் கா

அநுபல்லவி

மர்ட்சிமை தங்கிடும் அர
சாட்சி செய்யுந் தாட்சி யில்லா கா

சரணம்

மாதமும் மும்மாரியாகப் பெய்யின் தர்ம நீதியே
மாநிலம் புகழும் மலை யாள மெனும் க்யாதியே
மாபலா வாழை தென்னைகள் சூழ்ந்து—நிழ
லே தரவே மா மாடல்கள் சாய்ந்து—சுகந்த
வாசனைப் புஷ்பத் தென்றலும் வாய்ந்து
பரிமளிக்கும் சாரம்
இணையற்ற சிங்காரம்
தன்னைச் சொல்வோர் வாசம்
போராத விபகாரமிது கா

பார்புகழும் பத்மனுபன் சன்னதியமைந்ததும்
கோவிலெதிரே இரண்டு குளங்களிசைந்ததும்
கோடா கோடியாகச் செலவிட்டு
புத்தங்கச்சேரி என்றமைத்த ஹைக்கோர்ட்டு
அதின் எதிர் மாதவரையர் ஸ்டேட்டு
சுற்றிலுங் கம்பி கேட்டு
சூழ்ந்த போலீஸ் பீட்டு
சுந்தரன் தமிழ்ப் பாட்டு
சொல்ல கமலம் கேட்டு இது கா

பிளேட் நெ. 5587 காமவலி பாயுதே அமீர்கல்யாணி ஆதி.

பல்லவி

69. காம வலீ பாயுதே கருத்தோடு விதமாகத் தயங்குதே
கருணை செய்யடி என் மடமானே காம

அநுபல்லவி

தாமதிக்க லாகுமோ நீ தயவு செய்யடி மானே
கோமளமே மட மயிலே கோபமோடி தேனே காம

சரணம்

கொஞ்சி முன்னே
ரஞ்சிதம் பேசவே
சஞ்சலம் தீரடி
நெஞ்சது மாறுதே காம

மதுரை மிஸ் அ. சுந்தரம் பாடியது.

பிளேட் நெ. 2974 நம்பினவர்க்கருளின்பம் தரும் இராகம்.

காபி தாளம்

பல்லவி

70. நம்பினவர்க் கருளின்பம் தரும் ஜெயராமா
குணம் பூமா பரந்தாமா நேமா நம்பி

அநுபல்லவி

நாதனே மணப்பாதனே சதுர் வேதனே
ஜெயராமா குண பூமா பரந்தாமா நேமா நம்பி

சரணம்

அன்பான தேவர் முனிவர்கள் தேடிடும்
ஆதியே ஜோதி நீயே
அரியே சராசரம் யாவுமே காத்தருளும்
ஆனந்தத் தந்தை தாயே
அஞ்சியே கதி கெஞ்சி பாஸ்கரன் செஞ்சொற் பாடினேன்
ஜெயராமா குணபூமா பரந்தாமா நேமா நம்பி

பிளேட நெ. 2974 நாலுமைந்து இராகம் செஞ்சுருட்டி

திருப்புகழ்

71. நாலுமைந்து வாசல் கீறு
தூறுடம்பு கால் கையாகி
நாரியென் பிலாகு மாக—மதனூடே
நாதமொன்ற ஆதி வாயில்
நாடகங்களான ஆடி
நாடறிந்திடாம லேக—வளரா முன்
நூலநந்த கோடி தேடி
மால் மிகுந்து பாருளோரை
நூறுசொஞ்சல் கூறி மாறி—விளை தீமை

பிளேட் நெ. 2976 ஷாடானனா இராகம் கமாஸ் தாளம் ஆதி

பல்லவி

72. ஷாடானனா சிகி வாகனா
ஷடாக் ஷகம் சித்தமே நயோ ஷா

அநுபல்லவி

ப்ருடனீவிதா மதி தாரக
கடஜாதி முனி கீதவைபவா

சரணம்

ஸூரஸாதக ஸூப தாயக
வாதேவஸேனு வள்ளி நாயகா
சரவணபவ சக்தி யூத தரா
கருணுகடாக்ஷ குக்குடாத்வஜ ஷ

பிளேட் நெ. 2976 இராகம் சுத்ததேசி தாளம் தேசாதி

பல்லவி

73. ரகுநந்தந ராஜமோஹந
ரமியிம்பவே நாம நஸூநந ரகு

அநுபல்லவி

நகஜா நிலஜ நாதா திஹ்ருந்
நாளிகநி வாஸூடை நகாநிஶ்ரீ

சரணம்

சிந்த மந்து நின்னும் சிப்ரோமதோ
சிம்திம்சு ஸத்பக்துல
நுத்தமொத்த முலம்சு நாமதி
நும்சி பூஜிம்ச லேதா
தத்தரம்பு தீர்சு காரணம்பு நீவே
தாள ஜாலதிக த்யாக ராஜநுத ரகு

கே.டி. நடராஜம்பிள்ளை பாடியது

பிளேட் நெ. 2205 இந்துஸ்தான் மேட் தாளம் ஆதி

பல்லவி

74. சோதித்திடவே வந்து சொல்லும் சங்கதி யல்லவே
தொல்பதியிற் றுனே சோ

அநுபல்லவி

வாதித்த தோழிகள் வல்லமை மிகப்பேசி
சாதித்து ஆமைபோல தசக்கிறுளே சீ சீ சோ

சரணம்

தாசியிலாவது சிலது தப்பிலியால் நேர்வது சிலது
காசியாலாசை சிலது கைகூப்புவற் சிலது
கருணையிலாத பர புருடரை நம்பொணாது
வருத்த முறச்செய்குவார் திருத்தமிலாமல் தோது சோ

திருநெல்வேலி

T. S. ரெங்கம்மாள் பாடியது

பிளேட் நெ. 1749 { எவள் வேணுமோ—தமிழ்ப்பதம் / காமபாணமோ—கவிக்குஞ்சர பதம்

பல்லவி

75. எவள் வேணுமோ அவள் சகிக்கட்டும்
நீ அதை இங்கேண்டி சொல்கிறாய் எ

அநுபல்லவி

தவனப்பதியில் வாழும் மாமனை என்ற
தக்ஷணை வைத்துக் கொடுத்து வைத்த சீமாட்டி எ

சரணம்

இவ்வளவு நடந்தது என்ன விவகாரம்
இன்று வாய்த்ததோ அவள் நினைவின் பிரகாரம்
அவரைத்தான் சொல்ல வுண்டோ விவகாரம்
அதுவெல்லாம் சகியே என் அதிர்ஷ்டானுசாரம்
அதி உனக்கேது அத்தனையோ
வெறும் பொய்யான தென்னிட ஜாதகல்பனை
மாதேவிட்டிட வேதமுற்றிட பாதகத்தே
இனிமேல் நமக்கென்ன அந்த பிரஸ்தாபம்
எள்ளத்தனையாகிலும் அதிலுண்டோ லாபம்
அன்னமே முன்னத்திலே நான்செய்த பாபம்
ஆர்செய்தாரடி வளருதே மனஸ் தாபம்
அக்கரை அவள் மிக்க கற்பனை
பொய்யும் சொல்லி என்னை பக்குவத்தில்
மிக்கலைத்து மிக்க கலைத்திடும் சக்காளத்தி எ

பல்லவி

76. காமபாணமோ ரகுராமபாணம்போல்—வெகு
கல்வினி இனிவாய் கஸ்தூரி பொட்டிடுமொரு நீ பாவாய் கா

அநுபல்லவி

இங்கென்னை விட்டு நீ போவாய்
என்னரசு பட்ட ஸ்திரீயு மாவாய்
வாலிப கால மீதே இதுவொரு
மனோகர லீலைக ளாடுவோமாக
கந்தம் புனுகு சவ்வாது கமிழ்ந்திடும்
புந்தம் புனுகிதம் என்பது காட்டி
பூ மாலை குழல் சூட்டி
மடி மேல் வைத்து நீட்டி
வெத்திலை சுருளை தீட்டி
யேயும் பாராடி
கரும்புருசியது தரும் பவளயிதழ் விரும்புமனமது
கண்டுங் கண்டுங் கண்டும் சிமிழ்முலை
கொண்டுக் கொண்டுங் கொண்டும் மொழியிடை
கட்டிய பொற்றகிலை தன்னொடிக் குளவிழ்த்தொரு
சற்பவளத்தை இறக்கி கதலித் தொடையிட்ட
சையத்தருமைத்தி முகுத்ததிக்கும் தாடைபுருவென
கும் கும்மென நீரிட போக சுகம்
கட்டாயமிட்ட ரவிக்கான கொக்கோக
எப்போ தொலைப்பேன் இளைப்பேனழைப்பேன்
சுத்தப்புர நாட்டுப்புற முத்துசாமி பாடலென
தாமதிக்காமல் சேரடி தயை கூறடி காம

M. N. முத்துக்குமாரசுவாமி பாவலர் பாடியது.

நம்பிக்கை கொண்டெல்லோரும் என்ற மெட்டு.

பல்லவி

77. கலியுகவரதக் காந்திமகானைக்
கண்டால் கலிதீரும்
கண்டால் கலிதீரும் நாமம்
விண்டால் வினை போகும்

அநுபல்லவி

சலியா மனத்திடை தீரன்
சாத்வீக கோதண்டராமன் புவி
தனிலிவரொரு வர பிரசாதக் குருஜன நாயகத் தெய்வம் கலி

தொகையறு

சுதந்தர மிழந்த இவ்விந்தியர் சுகம்பெற
துணிந்து பலதியாகம் செய்தார்
"சுயராஜ்யமே நமது பிறப்புரிமை" எனும் மொழியை
சொல்லியே வழி காட்டினார்

பாட்டு எடுப்பு

பல உலகினர் தினம் தொழும் கலையுணர் வீரக்
கருணாகர மூர்த்தி—பாவலர்
கருணாகர மூர்த்தி
குருவாய் புகழ் கீர்த்தி கலி

மேரே மவுலாபுலாலே மெட்டு

பல்லவி

78. கந்தா கார்த்திகேயா கனவேல் முருகா கந்

அநுபல்லவி

கதிபெற இது தரு உனதிருபதமருள் கந்
கருணைப் பெருகிய உளமதிலிச்சிறு எளியேனுக்
கொருவரமதுதா கந்

கவலை பந்த பாசமதால் அபலை இந்தவாறு நொந்தேன்
கந்தக்குழல் மாதரசி வந்தித் துணை
சேர்ந்திருக்க எந்தன் முன் காட்சி தந்தாள் கந்

தொகையறு

கழனி சூழ் பழனியங்கிரி வளர் முருகனே
கதிர் காமத் துறையுங் குருவே
தொழுமெனக் கோர்வரம் அளிப்பது பாரமோ
துய்யனே ஞானதுரையே கந்

பாட்டு எடுப்பு

சேவலங்கொடி தீரனே செந்தூரனே மயில் வீரனே
பாவலன்கவி ஆரனே வள்ளி மாரனே ஒய்யாரனே கந்

மூன்றும் பாகம் முற்றிற்று.

நாகரீக வேட்கையில் ஆர்வமுற்ற நங்கையற்கு
ஒரு கற்பனை

சரோஜினி.

அல்லது

நாகரீக வேட்கை

தென்பாதி T. S. கனகசபை அவர்கள்
எழுதியது.

படிக்கப்படிக்க பிரமிப்பு! எல்லாம் மர்மம்! எல்லாம் ரகசியம்! எல்லாம் கற்பனை! அபூர்வமான அலங்கார வர்ணனைகளுடன் கூடியது விலை அணு 5

உ

கணபதி துணை.

கிராமபோன்

கீர்த்தனாம்ருதம்.

(4-வது பாகம்.)

சங்கீத வித்வான்

S. V. சுப்பைய பாகவதர்

பாடிய பாடல்கள்.

பிளேட் நெ. 2239 சரசராணி கல்யாணி (பாகம் 1 & 2)

இராகம்-செஞ்சுருட்டி, தாளம்-ஆதி

பல்லவி

79. சரசராணி கல்யாணி சர

அநுபல்லவி

தருணிவாச மிகுவேணி சர

சரணம்

சுரவிநோத கலைவாணி
ஜோதி வானிலா காய் கொடூரமே
சுடும் சுடும் பயம் தரும் இது தகி சர
அறமினர் துதிசெய் அரசி உன்னை
ஆதரிக்கிறேன் நீ மதிக்கவே
ஆகம் பொருந்திடும் இது தருணமே சர

மனநிலையது கெட மதம்பெற மயங்கி நீ
எனை விடுவதுமல்ல சரியல்ல கதி உயர்
வனத்த ரொருரு சுகமாரி
மணமில்லாதயோர் துணையில்லாததேன்
மகிமை பெருக உரையெனதிகழ் சுகநய சர

பிளேட் நெ. 1782 உத்தாரந்-இராகம்-தோடி, தாளம்-ஆதி.

பல்லவி

80. உத்தாரந் தாருமையே எனக்
கொருவரு மில்லை பரகதியடைய உத்

அநுபல்லவி

வித்தைகள் கற்றது மில்லை யாரொருரு
பத்தியிற் சென்று பரகதியடைய உத்

சரணம்

பெண்டு பிள்ளையென்று பேயனைப் போலவே
கண்டு களித்துக் காலங்கழித்தேன் உத்
தில்லைச் சிதம்பரத்தை தெரிசித்து வந்துங்க
ளெல்லையை சார்த்துக்கொண் டிருக்கிறேனையே உத்

பிளேட் நெ. 1721 மஹிமை தெரிய—தரமா
இராகம்-சங்கராபரணம், தாளம்-ரூபகம்.

பல்லவி

81. மஹிமை தெரிய தரமா மஹி

அநுபல்லவி

அகிலலோக பர சிங்காரி
அணங்கை பேரொக்கமைந்தபாரி
லோககாரி இருவித புவிகாரி
உம்மைப் பிரிதிவி நேசமீனாட்சி
உலகம்பரவும் திருபழந்தொருவன் தருவன் பிடி.ைட

உருகும்படி எதிர்மறைபாவை அந்தோ கலகம் பெருகுர்தவரிடை
அமிர்தம் பெருகுந் திடை மூறு
கான மோகனு விநோத
ஞான பாக பானு ஞான
நம்பி வந்தேன் நிஜமே
மனதுக்கேற்றால் வருவேன் சாமி மஹி

சரணம்

வாலை குண சாதி மனு
நூலை யொரு சோதி முறை
வாசகர்சந் தோஷமோடு மேவிவந்தான் சுகம்
சோலைதோரும் தாவுங்குயில் போலிதம்பாடுபவள்
சோதி தரும் பூரணச்சந்தி
ரோதய சிங்கார மொடு மஹி

பிளேட் நே. 2072பாலசுப்ரமண்ய வடிவேலன்

இராகம்-ஆனந்தபைரவி, தாளம்-ஆதி.

பல்லவி.

பாலசுப்ரமணிய வடிவேலன் அடிவள்ளியே
உனக்குமனு கூலன் பால

அநுபல்லவி

வக்கணைச் சொல்லுக் கிளியே
பக்குவமுரைக்கும் குணசீலன் பரிபாலன் பால

சரணம்

உனக்குத் தகுந்த மனவாளன் உன்னை
உற்றணைக்கும் பன்னிருகை தோளன்
உத்தமனவித்துரமி உத்தமன் ஜனித்தமதி
கூபன் மறை பாகன்
வாசவர்க்கும் கேசவர்க்கும் முருகன்-புன
வள்ளியே உனக்கு மனுகூலன்

வக்கணைச் சொல்லுக் கிளியே
பக்குவ முரைக்கும் குணசீலன் பரிபாலன் பால

பிளேட் நெ. 1708 மேலான பெண்கள் நாயகம்

இராகம்-ஸ்ரீராகம், தாளம் ஆதி.

பல்லவி

83. மேலான பெண்கள் நாயகம் தேசத்துக்கனு
கூலானயிவர்கள் சாதகம் மே

அநுபல்லவி

வாலிப சம்பிரதாயம் வாசிப்பாளோ ரத்தியாயம்
கோதை கொலுமுகத்தில் கூறுவள் ஞாயம்
மேதை யிவளொரு பூர்ணச் சந்திரோதயம் மே

சரணம்

பங்க முற்றுபெற திங்களன்னமிவள்
நடைக்கு தேசத்திற் காநந்தம்
பாதுகை தொழுதுற்றிடாதிவளுடைக்கு ஞானக்கன்று
திங்கள்யாவும் பிரபங்கமுறு மிவளிடைக்குநாணுங்கற்று
மங்காதிவள் தன்தேசம் மாறுதென்னவிநோதம்
அங்கஜன் கண்களால் சாற்றிடும் யோகம்
பொங்கிடு மென்பதி லென்ன சந்தேக மே

நீதில்லாத புன்சிரிப்புகாணு மிவள்முகத்தில் நாளுங்கண்டு
தெரிசன காட்சியு மிசைபடுமே நாவதற்கு இவள் பிறந்த
தேதியும் லக்னமும் எழுதவேண்டும் புத்தகத்தில் மேதனியின்
கண்

ணதிவள் போல்புஜத்தில் இல்லையிந்த யுகத்தில்
மாதிவளிடத்தில் காதலித்து வருந்தலானேன் மே

பிளேட் நெ. 1750 மாதவர் குலத்துதித்த

[நொண்டிசிந்து]

84 மாதவர் குலத்துதித்த நல்ல
மாட்டிடையர் ஆச்சிசெய்து கேட்டிடச்சொல்வேன்
ஆதவ மரபினர்கள் கூடி
அரசு புரியுமுய ர்நகரந்தனில்
காவிரிப்பூம் பட்டணமாம் அதில்
கனத்த வணிகர் செல்வர் குலத்துதித்த
மேவிய மாச் சோட்டாஞ்செட்டியார் பெற்று
மேவளர்ந்த மைந்தனென்பேர் கோவலன் என்பார்
மாதிவள் கர்ணகை யென்பார் சிறுவயதில்
மாங்கனியை கைகொடுத்து மாலையுமிட்டேன்
மாதகியென்னும் பெயர் கொண்ட தாசியை
வைப்பு வைத்துக்கொண்டிருந்தேன்சொத்துயிழந்தேன்
மேலுமவளுக்கு நான் கடன் ஆகி
விட்டதினால் இவள் சிலம்பை விற்கவும் வந்தேன்
நானொரு இடத்திலிருந்தேன் மனந்
தத்தளித்து மெத்த மனம் துக்கப்படவே
இதுதான் சேதியம்மா வேறே
இப்புரத்தில் சுற்றிடமுமில்லை யில்லையம்மா மாத

பிளேட் நெ. 3063 சிதம்பரம் போகாமல்

இராகம்-ஆனந்த பைரவி-செஞ்சுருட்டி.

85 சிதம்பரம் போகாமல் இருப்பேனோ நான்
ஜென்மத்தை வீணாக கெடுப்பேனோ சித
பக்தியும் மனமும் பொருந்தின தங்கே
சத்தியம் சொன்னேன் சடலமும் இங்கே சித
ஆசையும் நேசமும் ஆனந்த மங்கே
பேசலும் பிதற்றலும் பாசமும் இங்கே

கோயம்பத்தூர் A. S. ராஜப்பா

பிளேட் நெ. 3065 மாமணி மரகத [காபி]

இராகம்-தாளம்-ஏகம்

பல்லவி

86 மாமணி மரகத சுபகர சொரூப
ஞானவரமருள் மீனு
சோமசுந்தரேஸ் வரமேவும்
சோபன கல்யாணி
துதி மதுராபுரி யானரூப நிதி ஞானி மா

அநுபல்லவி

தாயிலும் பிள்ளைக்காதாரம்
தானுண்டோ சொல்வாயே
சாகித்ய சுந்தரன் சொல்
சங்கீத தொண்டர் நேயர் மா

பிளேட் நெ. 2889 சங்கராபரணம்

பல்லவி

கதிர்வேலுக் கெதிர்வேலுமில்லையென
கட்டுவேனுனக்கு தனமே—கலி
கால சகல உலகாளும் ராஜவடி
வேலுனும்பர் வச மனமே கதி

அநுபல்லவி

கருணை யருணகிரி புகழ்வேல்-திரு-கலபமயிலிலகு மன்வேல்
அது தேகநிறைந்தொளிர் மின்வேல்-ஒருதீதிலாத குற
மாதுவள்ளியோடு பேசுமந்திர நன்வேல்-வேல்-வேல் கதிர்
ரத்னவடிவேல்-சித்ரவடிவேல்-மயூரவடிவேல்-முத்துவடிவேல்
தீரசத்ருசங்காரநித்யசுபதிவ்யமங்களவேல்-வேல்-வேல் [கதிர்

சரணம்

சமரச சங்காரதாஸ சரபமுத்துசாமி தொண்டு புரிவேல்
வீராசாமி சந்தானகிருஷ்ண சுப்புருயா திகளும் பணிவேல்
சங்கரவேலனும் பணிவேல்-தமிழ்சிங்கவேல் சாமி அணிவேல்
திசைதங்கும் பாஸ்கரன் நினைவேல் சங்கதி யெங்கும்
அலங்கிர்தரங்க ராஜன்மாதன வேல்-வேல்-வேல் கதிர்

பிளேட் நெ. 3065 கந்தய்யா நானுக்கு
இராகம் தேசிகதோடி, தாளம் ஏகம்
பல்லவி

88. கந்தய்யா நானுக்கு மகனல்லவோ
கனவானே குணவானே திருக்கழு குமரர்மலைகடவுளே கந்
அடுக்கு சந்தம்
கருத்திலொரு வருத்தமதை தவிர்த்தருளும்
திருத்தனி கைக் குழந்தை கந்
கானக்குறமகள் மருவிய யானைக்கொரு முகம்தழுவிய
கரத்தனனே மலரடி. தஞ்சம் உத்தமியனுதினம் கொஞ்சம்
ரஞ்சித கந்
ஆறுமுககுக உன்னைவிட வேறுகெதியில்லை
அந்தரங்க விந்தைமேவும் அமுர்தா கந்
அநுபல்லவி
என்தாயு மானவனே
இன்பம்கொஞ்சுமா செந்தூர் ப்ரமானந்தனே
ஏழைமுகம் பாரய்யனே
ஏது சூது மீதுகோபமா
மரகத நிறகழனிதனில் நடமிடுப்பழநி
கந்தமலர் பாதமதிலே யனந்தந்தான்
சதா காலமெல்லாம்போற்றுவதுன் மைந்தன்தான்
இது செஞ்சொற் சொல் நாகமுத்து சந்தந்தான்
செப்பும்ஜெய வெள்ளிச்சாமி
சொந்தந்தான் க்ருபையருள் மெஞ்ஞான கந்
சங்கீத வித்வான்

S. G. சுப்பிரமணிய பாகவதர்
ஆரியகான சபை

பிளேட் நெ. 5220 சற்றே விலகியிரும் இராகம் பூரிகல்யாணி
தாளம் ரூபகம்
பல்லவி

89 சற்றே விலகி யிரும் பிள்ளாய்
சன்னிதானம் மறைக்குதாம் நீ சற்

நற்றவம் புரியும் நம்முடைத்திரு
நாளைப் போவார் வந்திருக்கிறார் சற்றே

சரணங்கள்

சாதிமுறைமை பேசுறான்
தன்னை யிகழ்ந்து ஏசுறான்
கோதிலாத குணமுடையோன்
கோபங் கொண்டால் தாளமாட்டேன் சற்றே
வேதகுலத்தைப் போற்றுறான்
விரும்பி விரும்பி யேற்றுறான்
பூதலத்திலிவனைப் போல
புண்ணிய புருட னொருவனில்லை சற்றே
பக்தியில் கரை கண்டவன்
பார்த்துப் பார்த்து வுண்டவன்
சித்தங் குறையில் நமது செல்வம்
முற்றும் குறையும் தயவுசெய்து சற்றே

T. M. காதர்பாஷா பாடியது

பிளேட் நெ. 3064 கோருங்கள் கோருங்கள்

தேசிக தோடி

பல்லவி

90. கோருங்கள் கோருங்கள் கோருங்களே நதி
கூறுங்கள் கூறுங்கள் கூறுங்களே நின்று கோ

அநுபல்லவி

கூவுங்கொடி சேவலனே
தேவர் படைக்காவலனே

சரணம்

பாருங்கள் மானிட தேகஞ் சந்தேகம்
பற்பலரால்நீவிர் கண்டனிபோகம்
தேருங்கள் புண்ய நிதி பெரும் பாகம்
திருமுகக் கடவுளடிக்
கிருபைபெறக் கருதிமிகக் கோ

பாவபுண்யமிவ் விரண்டும் நம்மோடே
பஞ்சபூதத்தாற் பயின்றதிக் கூடே
ஆவிபோனாலோ மகாவெட்கக்கேடே
அதிமதுரக் கிளிவசனம்
பரிமள சற் குருமணியைக் கோ
ஆதியிற்பட்டினச் சாமி சொலீதே
ஆரிருந்தென்ன நமன் வரும்போதே
காதற்ற வூசியுங் கூடவராதே
கண்டிடுவீர் தண்டமிழ்சொற்
கொண்டநிதிப் பண்டிதனை கோ

பிளேட் நெ. 2378 ஆதரிப்பதுன்பாரம் 1&2 இராகம் தோடி
தாளம் ஆதி

பல்லவி

91. ஆதரிப்பதுன் பாரம் ஆறுமுகனே
அடியேன் எனை ஆதரிப்பதுன்பாரம் ஆத

அநுபல்லவி

அய்யனே மெய்யனே
துய்யனே வையாபுரி பன்னிருகையா ஆத

சரணம்

பாதகனென்னைக் கைவிட்டிடாதே
பாடிதுதிக்கும் சாரீரம் தந்தாளிப்போதே
சாதனைசெய்வதுந் தருமமாகாதே
தாய்தந்தை குருதெய்வம்
யாவும் நீ இப்புவி மீதே ஆத

பிளேட் நெ. 2406 முருகனே உன் அருமை பேச
இராகம் தேசிக தோடி தாளம் ஆதி.

பல்லவி

92. முருகனே உன் அருமை பேச
கோலாகலக் குமாரா முரு

அநுபல்லவி

அமரஞான கிருபைமோன தமிழ் உலகெங்கும் விளங்கும்
ஞான முரு

சரணம்

குருபரா எனவரும் அருமுகா சரவணம்
அகிலம் துலங்கும் சுகுண
அரகரா எனவரும் அரகரா அரகரா
அன்பர் கொண்டாடும் முருகா
ஆடுமயிலா விநோத முரு

பிளேட் நே. 2406 தேடினேன் நானே
இராகம் செஞ்சுருட்டி தாளம் ஆதி.

பல்லவி

93. தேடினே நானே பாடினேன் யானே
சித்தம் நொந்தேனே ஸ்ரீராமா தேடி.

முடுகு

கவலையனுபவித்தருள் தவினாலே சீமானே தேடி
தெண்ணினேன் லங்கை
தொண்ணூறு காதம் சென்று ஓடினேன் தேடி.
பெருங்கடல் மூலே மண்மேடை யோடியுங்
காணேன் நான் இங்கே வந்து
சங்கரா சாக்ஷாத் சம்பந்த முத்து
சாமி கொண்டாடும் ஸ்ரீராமா

ஆர்ய கானசபை

M.S. ராமசந்திர அய்யர் பாடியது.

பிளேட் நெ. 5349 வாவா மயூரா (காமிக்)

பல்லவி

94. வா வா மயூரா
மரகத மயில் வீரா வா

அநுபல்லவி

தாதா உனதருள் சரவண பவகுகனே
தேவாதி தேவா மூவரில் மூவா
சேவலங் கொடியவா வா

சரணம்

குன்றுதோறும் நடமாடிய முருகா
கோகுலப்ருந்தாவன மாலின் மருகா
என் காதிலே நலம் சொலிப்புகழ் தருகா
எழில் கதிர்வடிவேலா முனம் நீ வருகா
எம்பிரான் தேசிகா
தம்பிரானே ஷண்முகா
நம்பினேன் . கார்குகா
அம்பாள் சுசிலா கற்பகா
ஆலகால முண்ட வையன்
பாலகா சீலமுடன் காரும் மெய்யன்
பணிந்தேன் துணிந்தேன்
குணிந்தேன் முனிந்தேன்
குமர குரு பரனே
குகனே பன்னிரு கரனே வா

T. S. ரெங்கம்மாள் பாடியது.

பிளேட் நெ. 1524 நடனமாடினர்

இராகம் நாதநாமக்கிரியை தாளம் ஆதி.

பல்லவி

95. நடனமாடினர் ஐயர் நடனமாடினர் நட

அநுபல்லவி

நடனமாடினு! தில்லை நாயகம் பொன்னம்பலந்தனில் நட

சுரம்.

தகிட தகிட தகஜம் பிரத் துண சனுத தகதத்திமி
தத்தளாங்கு தகதளாங்கு தகதிகு ததிங்கிண தோமென நட

சரணம்

முத்திமடந்தை சித்திக்க சித்திக்க
மோகவலைகள் தித்திக்க தித்திக்க
பக்தர்கள் மனது பத்திக்க பத்திக்க
பாதச் சிலம்பு சத்திக்க சத்திக்க

பணிமதி சடையாட பதஞ்சலிமாமுனி மறையாட
பண்ணவர் கண்டுகொண்ட கோபால கிருஷ்ணன்
மத்தளம் போட நட

பிளேட் நெ. 2135 கண்ணியமுள்ள

இராகம் ஆனந்தபைரவி தாளம் ஆதி.

பல்லவி

96. கண்ணியமுள்ள மாத சுகுமாரா
நான் கேட்பதை அளித்திடும் தீரா கண்

அநுபல்லவி

புண்ணிய பலத்தின் அவதாரா
பூமியெங்கும் புகழ் ஓய்யாரா கண்

சரணங்கள்

நாமிருக்கும் ஏழடுக்குமாடி அதில்
நாலுபக்கமும் நிலைக்கண்ணாடி
பூமி யெங்கும் வளங்கொண்டாடி நல்ல
புதுமையைக் காணவேணுங் கூடி
சுந்தரப்படங்கள் ஜோடிபார்த்து மனைச்
சுவர்களிலெங்கும் சேர்த்து
அந்தமாய் குரோட்டன்ஸ் வைத்து கொடி
அழகாய் படறவே செய்து
டாக்கர் கம்பெனியாரின் மேக்வித்து இது
டாம்பீக வைரபுலாக்கு
வாகாய் பல நகைகள்ஷோக்கு இதை
வாங்கியணிந்தாலல்லோர லீக்கி
நடுவினில் நியூஸ்பிரிங் கட்டில் அதில்
நாகரீகப் பட்டு மெத்தை போட்டு
உடுமதிபோல் கியாஸ் லைட்டு நல்ல
ஒளியுந்தந்தா லல்லோ ரைட்டு கண்

S. R. கமலம் பாடிய பாடல்

பிளேட் நெ. 2092 மதுரமொழி ராமனை ஏன் ஏசுராய்

இராகம் தன்யாசி தாளம் ஆதி

பல்லவி.

97. மதுர மொழி ராமனை ஏன் ஏசுகிறாய் மதுர

அநுபல்லவி

சுகுணமானவன் சுந்தரமானவன் சுதனவனே
தரையாளுவதும் முறையே மதுர

சரணம்

மாசிலாத மதிமுக முடையோன்
தேசமெல்லாம் புகழ் தீரமனதுடையோன்
தேவரும் போற்றும் திவ்யகுணளன்
சுதனவனே தரையாளுவதும் முறையே மதுர

என்னடி முழுக்கிப்போச்சுது

(இ) கேதாரம்-தாளம்-திரஸ்- ரூபகம்

பல்லவி

98. என்னடி முழுகிப்போச்சுது இதனால் நமக்கு என்னடி

அநுபல்லவி

இன்னமுனக் கேனிந்த துற்புத்தி
இதனால்உனக்கு என்ன கீர்த்தி என்னடி

சரணம்

கோசலை சொல்லுக் கிரண்டோ
கூனியே நான்சொன்ன துண்டோ
மோசக் கருத்தை நீயோ கொண்டும்
மோடிவ்வாறாக மொழிவதொன்றோ என்னடி
பின்னவன் பாதனன்றோ ஏற்பதற்கு ராமனன்றோ
அன்னவை அறிந்தே பட்டம்
அளிப்பதே எனக்கிஷ்டம் என்னடி

பிளேட் நெ· 5095 ஆனால் உனக்கோரு இராகம்

நாதனுமக்கிரியை தாளம்-ஆதி

பல்லவி

99. ஆனால் உனக்கொரு அற்புதம் கூறுவதை
அறிந்துக் கொள் தெரிவையரே ஆனால்

அநுபல்லவி.

மானுபரணன் மகன் வடிவேல் செய்த தீங்கை
தேனார்மொழி தன்னாலே தெரிவிப்பேன் பொல்லாங்கை ஆ

சரணம்

வள்ளி குஞ்சரியுடன் வரந்தா யெந்தன் முன் தான்
வருகுவாரென்றுமே வழிபார்த்து நானிருந்தேன்
புள்ளி மயிலின் மீதி புண்ணியன் வந்து யிங்ஙனம்
உள்ளம் பூரிக்கத் தருவாய் உண்மை என்று
நம்பிவேன் முனம் ஆ

மதுரை மிஸ் A. சுந்தரம் பாடியது.

பிளேட் நே. 2615 வா வா முருகா

இராகம் காபி தாளம் ஆதி.

பல்லவி

வாவா முருகா வேலவா
வள்ளி மண வாளா வாவா

அநுபல்லவி.

வெந்துயரால் நொந்துமிகச்
சிந்தை கலக்கங் கொண்டேனே வாவா

சரணம்

வீரர்கள் கண் டஞ்சிடும்
சூரர்களை நாசம் செய்து
தேவர்களும் பூ சுரரும்
கூவிமலர் தூவப் பெற்றுல்
நாரதர் சொல் புனமே
சோலை வள்ளியைக் கண்டு
வேங்கை மராமாய்க் கிழவனாய்
மங்கையை மராமாய்க் செய்தாய் வாவா

17828 8

எந்தன் சிந்தை குறையை
வந்து வுதவுவா யெனில்
உந்தன் பழனி சன்னதி
வந்து தரிசிப்பே னுன்னை

பிளேட் நெ. 2190 இராகம் மனோகரி தாளம் ஆதி

பல்லவி

101. நின்னு நேர நம்மினுனுரா நாம நில

அநுபல்லவி

கன்னதல்லி தன்றி நீகதா நில்
கருணாஸாகர தாளய வாதா நில்

சரணம்

சரணமனின நிகிசருளிப்ரோ ஜிதிவி
கருணதோ சபரிகி கதிபொஸகிதிவி
ஹரிகேச புரண வாஸ
அமரவினுத ஆதி மூல நின்

நான்காம் பாகம் முற்றிற்று.

அதியற்புதக் கதா கற்பித பொக்கிஷம்!

மதனசிங்கர் அல்லது உரிமை இழந்த சியர்ன்

ஓர் இனிய துப்பறியும் நவீனம்!
மருதூர் A. பிரபாகர சாஸ்திரி B. A. அவர்கள்
எழுதியது.

அனுபவமும் ஆனந்தமும் இணையில்லா கற்பனை
யும் நிறைந்த நவீனம் விலை ரூ. 1—0—0

இனிமையான நாவல்! கனிரசம் போன்ற நாவல்!!

காதற் கடிதங்கள் மிளிரும் புதிய தமிழ் நாவல்!!!

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதிய

கோபாலரத்னம்

இதில் வேலையில்லாதத் திண்டாட்டத்தினால் தற்காலம் பட்டம்பெற்றவர்களும் படும் பரமசங்கடங்களும், வரதட்க்ஷிணை யென்னும் பைசாசத்தினால் உண்மைக் காதலர்களைப் பிரித்துவைக்கும் பரிபவமும், மாரியில்லாப் பயிர்போல் வாடி வதங்கிப் பிரிந்த காதலர்களின் அன்பு ததும்பிய கடிதங்களும், கதா நாயகியின் அபாரமேன்மையும், ராமலக்ஷ்மணரைப்போன்ற உத்தமசகோதரர்களின் உயரிய வாஞ்சையும், ஒற்றுமையும் "பொறுத்தாருக்குப் பொன்றுந்துணையும் புகழ்" என்றபடி மாமி மாமனிடம் சொல்லொணுக் கஷ்டங்களைப் பொறுமையுடன் அனுபவிக்கும் பூமாதேவியின் புனிதமான குணமும், உலகானுபவமே உருவாகக் கொண்ட அதியற்புதமான இதர விஷயங்களும் நிறைந்து மிளிரக்காணலாம்.

சித்திரப் படத்துடன் விலை அணு 14

கிடைக்குமிடம்:—

ஸ்ரீ வாணி விலாச புத்தகசாலை,

79, சுப்புராய செட்டி வீதி, திருப்பாதிரிப்புலியூர்.

இராஜீயப்புயல் அதி உக்கிரமாய் வீசுகின்ற இச்சமயத்திற்
கதா வாசகர்களின் மனோபாவம் தேசபக்தியையும்
வீரரசத்தையே நாடுகின்றதாதலால்?
அத்தகைய வீரம் செறிந்த நவீனம் எது?

அறுபது தலைவாங்கிய அற்புதவல்லி.

என்னும் அதிசயக் கற்பனை!

அசம்பாவிதமான சட்டுக் கதையன்று—நவீனத்தில்
நவீன நவரச நாவல் அலங்காரம்!

வீரப் பொழில்! காதற் களஞ்சியம்!
இன்ப ஊற்று! ஆனந்த வெள்ளம்!
இவைகள் அமைத்த அற்புத சுதாசாகரம்

அற்புதவல்லி!

"கைப்பட்ட மாத்திரத்தில் பட்டமரம் தளிர்ப்பதற்கும் இறந்தவர் எழுதற்கும் வரப்பிரசாதம் பெற்ற தெய்வீக நங்கையல்ல!"

"ஐவருக்குந்தேவி அழியாத பத்தினி" எனப் பெயரெடுத்து
பாரதப்போர் மூட்டிப் பழிதீர்த்துக் கூந்தல் முடித்த
பாஞ்சாலியல்ல!

அப்படியானால் அவள் யார்?

அன்னியர் ஆட்சியில் புரட்சி செய்ததால் அதன் ஆக்கினைக்கு ஆளாகாமல் ஆவேசங்கொண்டு அக்கினியில் பாய்ந்த வீரசக்தி ராணிஜான்ஸியைப்போல்—நவீன நாகரீக உலகம் நடுநடுங்க—அங்கம் பதற—ஆவி துடிதுடிக்க—அறுபது தலைகளை வெட்டி வீழ்த்திய வீரதீர பாரத புத்திரி!

அவள்—

சகல கலாவல்லி! சாகசக்காரி! சாகித்யக்காரி! சரசக்காரி!

அத்தகைய அழகி	அதிசயம்!	திகைப்பு!
அற்புதவல்லியின்	அனைத்தும் ஆச்சர்யம்!	எல்லாம் மர்மம்!
அதிசயச் செய்கை	அற்புதம்!	ரகசியம்!

டபிள் கிரௌன் 1 × 16 = 380 பக்கம் அநேக ஆப்டோன்
படங்களுடன். விலை ரூ 1-8-0

ஸ்ரீ வாணி விலாச புத்தகசாலை, திருப்பாதிரிப்புலியூர்.

மனோரஞ்சனி பிரஸ், சௌகார்பேட்டை, சென்னை